தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 18 மடல் 1 ஜனவரி – 2018 ₹1.00

## இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு 'ஏரறிஞர்' விருது அளிப்பு




தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் புதுதில்லி, வேளாண் அறிவியல் தமிழ் இயக்கமும் கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், நாகப்பட்டினம், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமும் இணைந்து வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு 'ஏரறிஞர் விருது' அளிப்பு விழாவினை சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் அண்ணா கலையரங்கில் 10.12.2017அன்று நடத்தின. மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. எம். வெங்கய்யா நாயுடு அவர்கள் ஏரறிஞர் விருதினை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு வழங்கி, ஆற்றிய தமது உரையில் எப்படி ஆராய்ச்சி, விவசாயிகளையும் அவர்களின் வாழ்வையும் மாற்றியது என்பதை உலகிற்கு உணர்த்திய பெருமகன் பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் என்று குறிப்பிட்டார். விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் தமது உரையில் கிராமப்புற இளைஞர்கள் நகரப் பகுதிகளுக்கு இடம்பெயர்வது குறித்துக் கருத்துத் தெரிவித்து, வேளாண் மற்றும் அதன் சார்புத் துறைகளில் காலத்திற்கேற்ற நீடித்த புதிய தொழில்நுட்பங்கள் தேவை என்றார். தமிழக வேளாண் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். துரைக்கண்ணு, தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. பாண்டியராஜன், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் நிறுவனத் தலைவர் முனைவர் முத்தமிழ்ச் செல்வன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கே. ராமசாமி, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எஸ். ஃபெலிக்ஸ் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமை நிலையப் பிரிவுகளின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

## வேளாண் கல்வி நாள் விழா

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் 05.12.2017அன்று வேளாண் கல்வி நாள் விழா கொண்டாடப்பட்டது. நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ச. சண்முகசுந்தரம் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று "இந்தியாவில் வேளாண் கல்வி" குறித்துச் சிறப்பு விரிவுரையாற்றிப் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் ப. சதாசிவம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி, போட்டித் தேர்வுகளுக்குப் புத்தகங்கள் வாங்க ரூபாய் 10,000/– நன்கொடை வழங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சென்னை, மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு நிலையத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் டி. ரவிசங்கர் அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று, வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு மேம்பாட்டில் மனித ஆற்றலின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார். ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற விழாவில் குடுமியான்மலை



வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் கே. சுப்ரமணியம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "வேளாண் கல்வியில் வாய்ப்புகளும் சவால்களும்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் ஓசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணையின் துணை இயக்குநர் மருத்துவர் இராஜேந்திரன் "இந்திய விவசாய மேம்பாட்டில் விவசாயிகளின் பங்கு மற்றும் பணி" குறித்துச் சிறப்புரை ஆற்றினார். தத்தம் கல்லூரிகளின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் விழாவில் பங்கேற்றனர்.

## அங்ககப் பண்ணைத் துவக்க விழா

காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் "அங்ககப் பண்ணை" நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பண்ணையைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் (பொ.), முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் 29.12.2017அன்று துவக்கிவைத்து, "அங்ககக் கால்நடைப் பண்ணை மற்றும் மூலிகைத் தோட்டம்" என்ற புத்தகத்தை வெளியிட்டுப் பண்ணையாளர்களிடையே உரையாற்றினார். கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஹ. கோபி அவர்கள் வரவேற்புரை ஆற்றி, தமிழ்நாடு விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்பு இயக்ககம் வழங்கிய TNO(C)56–சான்றிதழைப் பெற்றுக்கொண்டார். விவசாயப் பிரிவுத் தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் பா. சுரேஷ் சுப்பிரமணியம் "அங்ககப் பண்ணை நெறிமுறைகள்" குறித்து விரிவுரை ஆற்றினார்.

## தரமான ஆய்வக மேலாண்மை அமைப்பு மற்றும் உள்தணிக்கைப் பயிற்சி



கால்நடை நலக் கல்வி மையம், கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம்மூலம் ''தரமான ஆய்வக மேலாண்மை அமைப்பு மற்றும் உள்தணிக்கை ISO/ IEC 17025:2005''க்கான பயிற்சி 19.12.2017 முதல் 22.12.2017 வரை நடைபெற்றது. பயிற்சியில் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்திலிருந்து 13 ஆராய்ச்சியாளர்கள் கலந்துகொண்டனர். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் கா. குமணன் அவர்கள் வரவேற்புரை மற்றும் துவக்கவுரை வழங்கிப் பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டார். பயிற்சியில் விரிவுரை, குழு விவாதம் மற்றும் பயிற்சியாளர்கள் மதிப்பீடு ஆகியவை இடம்பெற்றன. பயிற்சி இயக்குநர் முனைவர் ஜி. சரத் சந்திரா அவர்கள் தரமான ஆய்வக மேலாண்மையின் உட்பிரிவுகள், எடையிடும் நிலுவையின் இடைநிலை மற்றும் செயல்திறன் சோதனை, இரசாயன மற்றும் உயிரியல் சோதனை, உள்தணிக்கை குறித்துப் பயிற்சி அளித்தார். திரு. கணேஷ் பாண்டி நிச்சயமற்ற அளவீடு குறித்து விளக்கினார். கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

## மரபுசார் கால்நடை மருத்துவப் பயிற்சி




''மரபுசார் கால்நடை மூலிகைப்பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மையம் அமைத்தல்'' என்ற மாநிலப் புதுமை நிதியுதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 14.12.2017 மற்றும் 15.12.2017, 27.12.2017 மற்றும் 28.12.2017ஆம் தேதிகளிலும் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 20.12.2017 மற்றும் 21.12.2017ஆம் தேதிகளிலும் மரபுசார் கால்நடை மருத்துவப் பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சியில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வேளாண் அறிவியல் நிலையம், கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகம், திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றைச் சார்ந்த 76 ஆசிரியர்கள் பங்கேற்றனர். தத்தம் கல்லூரிகளில் நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர்(பொ.) முனைவர் கு.அ. பாலசுப்ரமணியம், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு ஆகியோர் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினர். 50 களப் பணிக் கால்நடை மருத்துவர்கள் பங்கேற்ற பயிற்சி 08.12.2017அன்று திருப்பூரிலும், 100 பண்ணையாளர்கள் பயனடைந்த இரு பயிற்சிகள் நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும் நடத்தப்பட்டன.

## தகவல் மீட்பு முறைகள் குறித்த பயிலரங்கு

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் உயிர்நுட்பத் தகவல் மையம்மூலம் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிர்த் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியில் ''தகவல் மீட்பு முறைகள்'' குறித்த பயிலரங்கு, 5 தொகுதியாக 11.12.2017 முதல் 15.12.2017 வரை நடைபெற்றது. கல்லூரியின் பல்வேறு துறைகளைச் சார்ந்த 108 முதுநிலைப் பட்ட மாணவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கா. குமணன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

## பயிற்சி

- பெங்களூரு, மத்திய கோழியின அபிவிருத்தி அமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் கோழி வளர்ப்புப் பயிற்சி, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கோழியின அறிவியல் துறையில் 27.11.2017 முதல் 02.12.2017 வரை நடத்தப்பட்டது. பயிற்சியின் துவக்க விழாவிற்குக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கா. குமணன் அவர்கள் தலைமை வகித்தார். மத்திய கோழியின அபிவிருத்தி அமைப்பு



மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இணை இயக்குநர் மருத்துவர் வே. கிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். 02.12.2017அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவிற்குக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கா. குமணன் அவர்கள் தலைமை வகித்தார். முன்னாள் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன், கோழியின அறிவியல் துறையின் முன்னாள் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந. ராமமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.
- காட்டுப்பாக்கம், கால்நடை உணவியல் நிலையத்தில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் "வீட்டுத்தோட்டத்துடன் கூடிய வேளாண் காடுகளைச் சுய உதவிக் குழு மகளிரிடையே பிரபலப்படுத்துவதன்மூலம் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குதல்" என்ற பயிற்சி 12.12.2017 மற்றும் 13.12.2017ஆம் நாள்களில்



நடத்தப்பட்டது. கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் பயிற்சியினைத் துவக்கிவைத்து, தலைமையுரை ஆற்றினார். கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர்

முனைவர் ஹ. கோபி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பயிற்சியில் 29 சுய உதவிக் குழு மகளிர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் அவர்கள் பயனாளிகளுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறைமூலம் கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின்கீழ் "விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பில் பாரம்பரியத் தொழில்நுட்பங்கள்" பயிற்சி 14.12.2017 அன்று பச்சைமலையில் நடத்தப்பட்டது. பயிற்சியில் ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியாவின் 27 சமூகப் பணியாளர்கள் பங்கேற்றனர். டேராடூன், தேசியக் கண்டுபிடிப்பு மையத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ஆர்.கே. இரவிக்குமார் அவர்கள் உறுதிப்படுத்தப்பட்ட பாரம்பரியத் தொழில்நுட்பங்கள் பற்றிய விரிவுரையும் செயல்விளக்கமும் அளித்தார்.
- 07.12.2017அன்று திண்டுக்கல், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடத்தப்பட்ட மண்ணில்லாப் பசுந்தீவனப்பயிர் உற்பத்தி குறித்த பயிற்சியில் திண்டுக்கல், கால்நடைப் பராமரிப்புத் துறைமூலம் தேர்வுசெய்யப்பட்ட 40 பயனாளிகள் பங்கேற்றனர்.

### பண்ணையாளர் பயிலரங்கு



தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியில் "ஆண்டுக்கு ஒரு கன்று – கறவை மாட்டின் இனப்பெருக்கப் பராமரிப்பில் தொழில்நுட்ப மேலாண்மை" குறித்த பண்ணையாளர் பயிலரங்கு (நிலை–2) திண்டுக்கல், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தால் 12.12.2017அன்று நத்தத்திலும், சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தால் 15.12.2017அன்று அயோத்தியாபட்டினத்திலும் நடத்தப்பட்டது. சேலம், அயோத்தியாபட்டினத்தில் நடைபெற்ற பயிலரங்கைச் சேலம் மாவட்ட ஆட்சியர் திருமதி ரோஹிணி ரா. பாஜிபாகரே இ.ஆ.ப., அவர்கள் துவக்கிவைத்தார். மொத்தம் 500 பண்ணையாளர்கள் பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

### மருந்து உற்பத்தியாளர்கள் சந்திப்பு

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் கல்லூரியின் இறுதியாண்டு பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச் மாணவர்களுக்காக மருந்து உற்பத்தியாளர்கள் சந்திப்பு 13.12.2017அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து மருந்து நிறுவனங்களுக்குப் பங்கேற்புச் சான்றிதழ் மற்றும் வினாடி வினாப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்ற 15 மருந்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் மருந்து மாதிரிகளைக் காட்சிக்கு வைத்தனர்.

### விழிப்புணர்வு முகாம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை விரிவாக்கக் கல்வித் துறைமூலம் "தூய்மையான பால் உற்பத்தி மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட இறைச்சிப் பொருள்கள் தயாரிப்பு" குறித்த விழிப்புணர்வு முகாம் தத்தெடுப்புக் கிராமமான நெடுவாக்கோட்டையில் 14.12.2017அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் முகாமைத் துவக்கி வைத்தார். முகாமில் 30 விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### கல்லூரி மாணவருக்கு நிதியுதவி



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர் செல்வன் கே. சாந்தகுமார் அண்மையில் நிகழ்ந்த சாலை விபத்தில் தனது பெற்றோரை இழந்தார். இவ்விபத்தின் காரணமாக மாணவர் பாதுகாப்பு ஆயுள் காப்பீடு திட்டத்தின்கீழ் அவர் செலுத்திய தொகையை அவர் பெற முடியும் என்றாலும் எஞ்சிய படிப்புக் காலத்திற்கான படிப்புக் கட்டணத்தை எதிர்கொள்ள அவருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. குன்னூர் கிளையின் நியூ இந்தியா அஷ்சூரன்ஸ் கம்பெனியின் துணைப் பொது மேலாளர் திரு. வெங்கடாசலம் அவர்கள் ரூபாய் 1,80,095க்கான காசோலையை 19.12.2017அன்று அவரிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், பல்கலைக்கழகப் பதிவாளர்(பொ.) முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கா. குமணன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் இல. குணசீலன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், கல்லூரியின் மாணவர் சங்கத் துணைத் தலைவர் முனைவர் ஸ்ரீராம், சிகேபி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் நிறுவனத்தின் மண்டல மேலாளர் டாக்டர் ஜி. மாணிக்கவாசகம் ஆகியோர் பங்கேற்றனர்.

### செயல்முறைக் கற்றல்மூலம் நிகர இலாபம்



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறையில் "செயல்முறைக் கற்றல் – வணிக முறையில் பன்றி வளர்ப்புக்கான செய்முறைப் பயிற்சி வசதிகளை ஏற்படுத்தல்" என்ற இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவித் திட்டம் செயல்பட்டு வருகிறது. திட்டம்மூலம் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் 19 பேர் பன்றி வளர்ப்பை மேற்கொண்டு, நிகர இலாபமாக ரூபாய் 1,02,071 ஈட்டினர். ஈட்டிய நிகர இலாபத்தையும் பாராட்டுச் சான்றிதழையும் மாணவர்களுக்குக் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கு.அ. பாலசுப்ரமணியம் அவர்கள் 19.12.2017அன்று வழங்கினார்.

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Posted on 31.01.2018 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. N.K. Sudeep Kumar, Ph.D., Director of Distance Education i/c
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Thiruvallur District, Chennai - 600 051
Editor : **Dr. N.K. Sudeep Kumar,** M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411
E-mail : dde@tanuvas.org.in

### பரிசுகள் / பதக்கங்கள் வென்ற மாணவர்கள்

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கோழியின அறிவியல் துறையின் முதுநிலை மற்றும் முனைவர் பட்ட மாணவர்கள் பெங்களூருவில் 28.11.2017 முதல் 30.11.2017 வரை நடைபெற்ற இந்தியக் கோழியின அறிவியல் கழகத்தின் 34ஆவது மாநாட்டில் பரிசுகள் பல வென்றனர். முனைவர் பட்ட மாணவர் சி. பாண்டியன் இந்தியக் கோழியின அறிவியல் சஞ்சிகையில் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைக்காக 'ஆயுர்வெட் விருது –2016' பெற்றார். முனைவர் பட்ட மாணவர் அ. வருண் சிறந்த ஆய்வேடு, இளம் அறிவியலாளர் விருது மற்றும் சுவரிதழ் காட்சியளிப்பில் இரண்டாமிடம் ஆகிய மூன்று பரிசுகளைப் பெற்றார். மருத்துவர் நிபேதிதா நாயக் கோழியின ஊட்டச்சத்தியல் ஆய்வில் சீர்மிகு விருது பெற்றார்.
- தேசியக் கால்நடை உடற்செயலியல் வினாடி வினாப் போட்டி–2017 இந்தியக் கால்நடை உடற்செயலியல் சங்கம்மூலம் 21.12.2017அன்று பீதர், கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இப் போட்டியில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு மாணவி செல்வி கலிவெங்கட ஸ்ரீஹர்ஷா, இரண்டாம் ஆண்டு மாணவன் செல்வன் ந. பிரதீப் ஆகியோர் பங்கேற்றுத் தேசிய அளவில் மூன்றாம் இடம் பெற்றனர்.
- மகாராஷ்டிரா மாநில ஊரக விளையாட்டுக் கூட்டமைப்புமூலம் நெவாசா மாவட்டத்தில் 15.12.2017 முதல் 17.12.2017 வரை நடத்தப்பட்ட தேசிய அளவில் மண்டலங்களுக்கு இடையிலான ஊரகப் போட்டி–2017–2018இல் ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் பி.டெக். (கோழியினத் தொழில்நுட்பம்) மூன்றாம் ஆண்டு மாணவன் திரு. கே. விஜய் ஆனந்து பங்கேற்று, ஜுடோ 60 கிலோ பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.

### பல்கலைக்கழகத்திற்கு வைலே நூலக விருது–2017

பன்னாட்டு அறிவியல் ஆய்விதழ் பதிப்பாளர்களான வைலே நிறுவனத்தினர் "வைலே நூலக விருது–2017" என்ற விருதைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளனர். வைலே வெளியிடும் உலகத் தரம் வாய்ந்த கால்நடை மருத்துவ அறிவியல் ஆய்விதழ்களை சீரா (CeRA) கூட்டமைப்புமூலம் நமது பல்கலைக்கழகம் தேசிய அளவில் அதிகம் பயன்படுத்தியதற்காக இவ்விருது புதுதில்லியில் 20.12.2017அன்று நடைபெற்ற விழாவில் பல்கலைக்கழக நூலகர் முனைவர் ஜி. ரத்தினசபாபதியிடம் வழங்கப்பட்டது.

### நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்




- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் செஞ்சிலுவைச் சங்கமும் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவும் சென்னை, ராஜீவ் காந்தி மருத்துவமனையின் ரத்த வங்கியும் இணைந்து 21.12.2017அன்று 'இரத்ததான முகாமை' கல்லூரியின் டாக்டர் எம்.எஸ். சீனிவாசலு வளாகத்தில் நடத்தின. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கா. குமணன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் கல்லூரியின் 79 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்று, ரத்ததானம் அளித்தனர்.
- நாட்டுநலப் பணித் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சென்னை, அய்யப்பன்தாங்கலில் உள்ள மனநலம் குன்றிய மகளிர்க்கான ரிகாபோத் இல்லத்தை 30.12.2017அன்று மாணவர்கள் பார்வையிட்டனர். மேலும், லிட்டில் ட்ராப் முதியோர் இல்லத்தையும் மாணவர்கள் வருகை பார்வையிட்டனர்.

### பணி ஓய்வு



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறையின் ஆய்வக உதவியாளர் திரு. சி. கோவிந்தராஜு அவர்கள் 30.12.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 20.12.1959இல் பிறந்த இவர், 32 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**ஆசிரியர்**

முனைவர் நி.கு. சுதீப் குமார், தொலைநிலைக் கல்வி இயக்குநர் (பொ.)

**உறுப்பினர்கள்**

முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்